[1969 பிப்ரவரி 28

கீழ்குந்தா பேரூராட்சிக்குத் தேர்தல்

*109 வினா.—திரு. கே. போஜன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்திலுள்ள கீழ்குந்தா பேரூராட்சிக்கு உடனடியாக தேர்தல் நடத்த, அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: ஆம். கீழ்குந்தா பேரூராட்சி மன்றத்திற்கு உறுப்பினர்கள் தேர்தல் நடத்த தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

மதுரை மத்திய சிறையில் கைதியின் மரணம்

*110 வினா.—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறைச்சாலையில் 17—7—1968 அன்று ஒரு கைதி இறந்தாரா?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, விசாரணை என்ற பெயரால் இப்போது காவல் நிலையங்களில் நடைபெறுகிற கொடுமைகளைப் பார்த்தால், காவல் நிலையங்கள் எல்லாம் கசாப்புக்கடைகளாக மாறிவருகின்றன. (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தின்போது உறுப்பினர்கள் எந்தவிதமான குற்றச்சாட்டுகளையும் கூறக் கூடாது. கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, காவல் நிலையங்களில் நடைபெறுகிற கொடுமைகள் முன்பு பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் இருந்த முறைகள் போலவே . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுவும் குற்றச்சாட்டுதான். குறை சொல்வதற்கு வேறு நேரம் இருக்கிறது. கேள்வி நேரத்தில் கேள்விகள்தான் கேட்க வேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, மதுரையில் ஒரு தொழிலாளி திருடினார் என்று குற்றம் சாட்டப்பட்டு, காவல் நிலையததில் அடிபட்டு இறந்தார் என்ற செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. சம்பந்தப்பட்டவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மத்திய சிறைச்சாலையி ஒரு கைதி இறந்தாரா என்பது மூலக் கேள்வி. காவல் நிலையத்தில இறந்தார் என்று அங்கத்தினர் கூறுவதற்கும் மூலக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.